1990 மார்ச் 21]

கொல்லிமலையிலிருந்து வரும் நீரைக்கொண்டு பாசன நீர்த்தேக்கம் அமைத்தல்.

***6732 திரு. வீ. பெ. துரைசாமி :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொல்லிமலையிலிருந்து வரும் நீர் பல இடங்களில் பரவலாக செல்வதைத் தடுத்து ஒரு பாசன நீர்த்தேக்கத் திட்டம் செயல்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது நிறைவேறும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இந்தத் திட்டத்திற்கான விரிவான ஆய்வு தல அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வுப் பணிகள் முடிந்து திட்ட அறிக்கை அரசுக்கு வரப்பெற்ற பின் பரிசீலித்து திட்டத்தை நிறைவேற்றுவது குறித்து முடிவு மேற்கொள்ளப் படும்.

மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், கொல்லிமலைப் பகுதி மற்றும் நாமக்கல் பகுதியில் சற்றொப்ப 10 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் நீர்ப்பாசனம் பெறும். அந்த வகையிலே, ஒரு கால வரையறை ஏற்பாடு செய்து, விரைவிலே இந்தத் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, ஆய்வுசெய்த திட்ட அறிக்கை இன்னும் அரசுக்கு வரவில்லை வந்த பிறகு, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து நினைவில் கொள்ளப்படும்.

போயர் மக்களை பழங்குடி மக்களாக அறிவித்தல்

***3547 திரு. ந. நஞ்சப்பன் :**

மாண்புமிகு ஆதி திராவிடர்நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் வாழும் போயர் மக்களை பழங்குடி மக்களாக அறிவிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழகத்தில் வாழும் போயர் இனத்தவர்களைத் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் பட்டியலில்